IN THE COURT OF IIIADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

C.C.No.6/18

Deposition of witness for

PW1 (LW2 )

Name : Tmt.Thilagam

S/W Name :
Age :
Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of July 2023 .

---

14. 7. 2023

**முதல் விசாரணை**

நான் 2013லிருந்து டிசம்பர் 2017 ஆண்டு வரை அரசு பகுப்பாய்வாளராக மருந்தாய்வு கூடம், சென்னையில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் பணியிலிருந்தபோது அயனாவரம் ரேன்ஜ், சோன் 2 மருந்தாய்வாளர் அனுப்பிய மாதிரி எண்.LSV/14 AYN/14 Flozine என்கிற மாதிரி மருந்தாய்வுகூடத்தில் ஆய்வுக்காக பெறப்பட்டது. அந்த மாதிரியின் பேட்ச் எண். 147 தயாரிப்பு தேதி அக்டோபர் 2013 காலாவதி தேதி செப்டம்பர் 2016 தயாரிப்பு நிறுவனம் M/s. Vertex Pharmaceutical No.1 Industrial estate, Ganesh Nagar, Allapakkam செயல்படும் நிறுவனமாகும். மேற்படி மருந்து 25.3.2014ம் தேதி ஆய்வுக்கு பெறப்பட்டது. மாதிரியை ஆய்வு செய்தபோது அதில் குறிப்பிட்ட மூலக் கூரான Prochlorperazine Maleate மாதிரியில் இல்லை. லேபிலில் குறிப்பிட்ட மூல கூறு இல்லாததால் மேலும் ஆய்வு செய்ததில் அதில் இருந்த மூல கூறுகளான Pharacetamol, Diethyl Carbamazine Citrate and Domperidone இருந்தது கண்டறியப்பட்டது. இம்மாதிரியின் பகுப்பாய்வு அறிக்கை எண்.07985-டி/ 2013 - 2014 தேதி 6.4.2015 தேதியில் அறிவிக்கப்பட்டது. எனவே இது

போலியான மருந்து என்று அறிவிக்கப்பட்டது. நான் வழங்கிய அறிக்கை அ.சா.ஆ.1.

<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

25.3.2014ம் தேதி மாதிரி எனக்கு கிடைக்கப்பெற்றது. எந்த தேதியில் மருந்து ஆய்வு செய்யப்பட்டது என்பது அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை பார்த்து தான் கூறமுடியும். அறிக்கையுடன் புரோட்டோகால் கொடுத்துள்ளேன். பகுப்பாய்வு USP (HPCL) Method பின்பற்றபட்டது. மேற்படி புரோட்டோகாலில் கிரப் போடவேண்டும். நான் தாக்கல் செய்துள்ள புரோட்டோகாலில் கிரப் கொடுக்கப்படவில்லை. ஏன்னென்றால் அந்த மருந்து கண்டறியப்படாததால் பீக் வரவில்லை. அந்த கிரப்பை தாக்கல் செய்தால் தான் பீக் வந்ததா இல்லையா என்று தெரியவரும். பகுப்பாய்வு எந்த நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டு எந்த நேரம் முடிக்கப்பட்டது என்று புரோட்டோகாலில் கொடுக்கப்படவில்லை. ஆனால் பகுப்பாய்வு செய்யும் இயந்திரத்திலேயே ஆய்வு செய்த நேரம் இருக்கும். ஒவ்வொரு மூலக்கூறுகளையும் ஆய்வு செய்வதற்கு என்று தனித்தனியாக கால அவகாசம் உள்ளது என்றால் உள்ளது. அந்த கால அவகாசத்தை ஆய்வு செய்யும் இயந்திரமே சரியாக கணக்கிட்டு செய்துவிடும். மூலக்கூறுகளை ஆய்வு செய்யும் நேரத்தை மாற்றினால் ரிசல்ட் மாறப்படுமா என்றால் மாறலாம். அது இதர factors ஐ பொருத்தாகும். மூலகூறுகளை ஆய்வு செய்வதற்கு Sodium – 1- octanesulfonate பயன்படுத்தப்பட்டது. மேற்படி கெமிக்கலை 500 மி.லி தண்ணீருடன் கலப்பது Manual ஆக செய்வோமா அல்லது இயந்திரம் மூலம் செய்வோமா என்றால் இயந்திரம் மூலமாக செய்வோம். கலக்கப்படும் தண்ணீரில் மாசு இருந்தால் ரிசல்ட் மாறுபடுமா என்றால் மாறுபடலாம். Pharacetamol, Diethyl Carbamazine Citrate and Domperidone அதை ஆய்வுபடுத்துவதற்கான புரோட்டோகால் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இணைக்கப்படவில்லை. ஆய்வின்போது மூன்று பீக்குகள் கிடைக்கப்பெற்றது. அதன் வேவ்லென்த்தை வைத்து பார்க்கும்போது

மேற்படி மூன்று கெமிக்கல்சின் மூலக்கூறுகளுக்கு ஒத்துப்போனதால் அந்த மருந்துகள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன். 6.4.2015ம் தேதி அறிக்கை தயார் செய்தேன். மாதிரி கிடைக்கப்பெற்றதிலிருந்து ஒரு வருடம் ஒரு மாதம் கழித்து தான் அறிக்கை கொடுத்தேன் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை ஆய்வு மேற்கொள்ளபட்ட தேதி, நேரம் குறிப்பிடாததாலும் மேலும் நான் இணைத்துள்ள புரோட்டோகாலில் கிராப் இணைக்கப்படாததாலும் நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை ஏற்ககூடியதல்ல என்றால் சரியல்ல. மாதிரி கிடைக்கப்பெற்றதிலிருந்து ஒரு வருடம் ஒரு மாதம் கழித்து அறிக்கை கொடுத்துள்ளதால் அந்த அறிக்கை நம்பதகுந்தல்ல என்றால் சரியல்ல.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

14.7.2023

III Addl. Sessions Judge.
III Addl. Court.